**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 20** **நாள்: 25.01.2019**

## பெருநகர சென்னை மாநகராட்சியில் 9வது தேசிய வாக்காளர் தின நிகழ்ச்சி தமிழக தலைமை தேர்தல் அலுவலர் திரு.சத்யபிரத சாஹு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகக் கூட்டரங்கில் இன்று (25.01.2019) 9வது தேசிய வாக்காளர் தின நிகழ்ச்சி தமிழக தலைமை தேர்தல் அலுவலர் திரு.சத்யபிரத சாஹு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சென்னை மாவட்ட தேர்தல் அலுவலரும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருமான முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.

முன்னதாக பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கான 1950 இலவச அழைப்பு எண்ணுடன் கூடிய வாக்காளர் அழைப்பு மையத்தை தலைமை தேர்தல் அலுவலர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

சுதந்திர இந்தியாவில் 1950ம் ஆண்டு ஜனவரி திங்கள் 25ம் நாள் இந்திய தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டது. 2011ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25ம் நாள் தேசிய வாக்காளர் தினமாக அனுசரிக்கப்படுகிறது. அதனடிப்படையில், இன்று (25.01.2019) “எந்த ஒரு வாக்காளரும் விடுபடக்கூடாது” (No Voter to be left behind) என்ற குறிக்கோளுடன் 9வது தேசிய வாக்காளர் தினம் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒவ்வொரு வாக்காளரும் வாக்களிப்பதன் அவசியம் குறித்த இந்திய தலைமை தேர்தல் ஆணையாளர் திரு.சுனில் அரோரா, இ.ஆ.ப., அவர்களின் காணொலி காட்சி ஒளிபரப்பப்பட்டது. பின்னர் தமிழக தலைமை தேர்தல் அலுவலர் திரு.சத்யபிரத சாஹு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அரசு அலுவலர்கள், பள்ளிக் கல்லூரி மாணவ, மாணவியர்கள் அனைவரும் தேசிய வாக்காளர் தின உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர். தமிழக தேர்தல் ஆணையம், வாக்காளர்கள் எண்ணிக்கை, வாக்குச்சாவடி மையங்களின் எண்ணிக்கை மற்றும் பள்ளிக் கல்லூரி மாணவ, மாணவியர்களின் விழிப்புணர்வு ஓவியங்கள் அடங்கிய கையேட்டினை தமிழக தலைமை தேர்தல் அலுவலர் அவர்கள் வெளியிட மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

மேலும், மாநில அளவில் கல்லூரி மற்றும் பள்ளிகளில் நடத்தப்பட்ட தேர்தல் மற்றும் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்த சுவரொட்டிகள், வாசகங்கள், குறும்படம்,

குறுநாடகங்கள் மற்றும் எழுத்துப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை தலைமை தேர்தல் அலுவலர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தலைமை தேர்தல் அலுவலர் அவர்கள் இந்தியா ஒரு வலிமையான ஜனநாயக நாடு. இங்கு நேர்மையான, அமைதியான மற்றும் வெளிப்படையான முறையில் தேர்தல் நடத்தப்படுகிறது. வளர்ந்துவரும் தொழில்நுட்பத்திற்கேற்ப மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் இந்தியாவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், ஒரு மைல் கல்லாக வாக்காளர் தான் யாருக்கு வாக்களித்தோம் என்பதை அறியும் வகையில் VVPAT (Voter Verified Paper Audit Trail) இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் 2,92,56,960 ஆண் வாக்காளர்கள், 2,98,60,765 பெண் வாக்காளர்கள், 5,472 மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் என மொத்தம் 5,91,23,197 வாக்காளர்கள் உள்ளனர். தமிழகத்தில் 29,988 இடங்களில் மொத்தம் 67,664 வாக்குப்பதிவு மையங்கள் உள்ளன. ஒவ்வொரு வாக்குப்பதிவு மையத்திலும் மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தளம், பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், கழிவறை மற்றும் மின்சார வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கான 1950 இலவச அழைப்புடன் கூடிய வாக்காளர் அழைப்பு மையம் துவங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒவ்வொரு வாக்காளரும் தங்களது வாக்காளர் அடையாள அட்டை, வாக்குச்சாவடி மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் போன்ற விவரங்களை தெரிந்து கொள்ளவும், தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்கவும் வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எனவே வருகின்ற தேர்தல்களில் அனைவரும் 100 சதவீதம் வாக்களித்து நம்முடைய ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்த வேண்டும் என தலைமை தேர்தல் அலுவலர் திரு.சத்யபிரத சாஹு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்த பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களின் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், துணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள், துணைத் தலைமை தேர்தல் அலுவலர் திருமதி ஆனி ஜோசப், மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு.ஏ.பெருமாள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**